**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 79 /2020 PW .6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருணாநிதி | தந்தை/கணவர் பெயர்: காளையப்பன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026

---

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**<u>04.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் 31.01.2023 ம் தேதி தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருக்கிறேன். கடந்த 09.01.2019 ம் தேதி நெற்குப்பை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 20.30 மணிக்கு நிலைய மனு எண் 3/2019 ல் சம்மந்தப்பட்ட புகாரை பார்வையிட்டு அதன் தன்மைக்குகேற்ப நெற்குப்பை காவல் நிலைய குற்ற எண் 4/2019 இதச பிரிவுகள் 147,148, 324,506(2), 427, 379(NH), 4 of TNWH Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ– 4 குறியீடு செய்யப்படுகிறது)**. புகார் மனுவிற்கு மனு இரசீது வழங்கிய சிறப்பு சார்பு ஆய்வாளர் இராஜேந்திரன் இறந்து விட்டார் .

2.வழக்கினை நான் விசாரிணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையை தினமே 21.30 மணிக்கு சம்பவ இடமான A. தெக்கூர் கிராமம் அ.சா.1 யின் வீட்டுக்கு முன்பு சென்று தெருவிளக்கு வெளிசத்தில் சாட்சிகள் வயிரவன் , ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். ( **அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ–5 மற்றும் மாதிரி வரைபடம் அ .த.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாகா விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் 1,2 எதிரிகள் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்ததால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரிகளின் மகன்களின் பெயர்களை நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த எதிரி நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரிகள் சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை உத்தரவு பெற்று கணம் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்று விட்டார்கள். அத்துடன் எனது பணிமாறுதல் சென்று விட்டதால் வழக்கு கோப்பினை ஆய்வாளரிடம் ஒப்படைத்து சென்று விட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து மறுநாள் தான் வழக்கு பதிவு செய்தேன். அ.சா.1 நேரடியாக காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தார் . அ.சா.1 காயம்பட்ட நபர் ஆவார். அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயத்துடன் வந்து புகார் கொடுத்தார் . எத்தணை மணிக்கு சம்பவம் நடந்தது என்று அ .சா.1 புகாரில், முதல் தகவில் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . காலை என்று சொல்லியுள்ளார் . நேரம் சொல்லவில்லை . 1,2 எதிரிகள் மற்றும் அவரது மூன்று மகன்கள் தன்னை கற்காலும், கட்டையாலும் அடித்து போனை உடைத்து நொருக்கி விட்டார்கள் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . செல்போன் எதுவும் கைப்பற்றவிடவில்லை. இந்த வழக்கில் எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை . சம்பவம் நடு ரோட்டில் நடந்தததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் வாதி வீட்டு முன்பாக என்று காண்பித்துள்ளேன் . எதிரிகளுக்கும் , இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் அ .சா.1 கொடுத்த புகாரைப் பெற்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.